## ஒரு பார்வை - பகுதி 1

**ஆதம் (அலை) அவர்களுக்கு ஸஜ்தா செய்ய இப்லீஸ் மறுத்தது, அதனால் இப்லீஸ் சொர்க்கத்தில் இருந்து வெளியேற்றப்பட்டது, அவன் மனிதகுலத்தை வழிகெடுப்பேன் என சபதம் செய்த நிகழ்வுகளை இந்தப் பிரிவு விவரிக்கிறது. ஆதம் (அலை) மற்றும் ஹவ்வா (அலை) இருவரும் அல்லாஹ்வின் கட்டளையை மறந்து, இப்லீஸால் ஏமாற்றப்பட்டனர். பின்பு அவர்கள் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோரினர். அல்லாஹ் அவர்களை மன்னித்து, பூமிக்கு அனுப்பி வைத்தான். இதன் மூலம் ஷைத்தானின் வஞ்சகத்தைப் பற்றி ஆதம் (அலை) மக்களுக்கு அல்லாஹ் எச்சரிக்கை விடுகிறான்.**

## தராவிஹ் - 7: (ரக்அத் 1 முதல் 4)

### ஸூரா - 7, அல்அஃராஃப்; வசனம்: 1 - 43; பிரிவு: 1 - 5

1. **அலிஃப், லாம், மீம், ஸாத்! நபியே! இது உமக்கு அருளப்பட்ட வேதம். இதைப் பற்றி உமது உள்ளத்தில் எந்த தயக்கமும் ஏற்பட வேண்டாம். இதன் மூலம் நீர் எச்சரிக்கை செய்யவேண்டும் என்பதற்காகவும், விசுவாசிகளுக்கு நல்லுபதேசமாக அமைய வேண்டும் என்பதற்காகவே இது உமக்கு அருளப்பட்டது. (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 1)**

2. **இப்லீஸ் அல்லாஹ்வுக்கு மாறுபட்டு, ஆதம் (அலை) அவர்களுக்கு சஜிதா செய்யவில்லை. காரணம் கேட்டதற்கு, தான் அவரைவிட மேலானவன். தான் நெருப்பினால் படைக்கப்பட்டவன், அவரோ வெறும் களிமண்ணால் படைக்கப்பட்டவர் என்று அவன் கூறினான். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 2)**

3. **அதற்கு அல்லாஹ், “தற்பெருமை கொள்ள உனக்கு உரிமை இல்லை. ஆதலால் நீ வெளியேறி விடு” என்றான். அதற்கு**

அவன், மறுமை நாள் வரை அவகாசம் கேட்க, அது அளிக்கப்பட்டது. (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 2)

4. இப்லீஸ் அல்லாஹ்விடம், “நான் ஆதமின் மக்களை வழி கெடுப்பேன். அவர்களுக்கு முன்னும், பின்னும், வலது பக்கத்திலும், இடது பக்கத்திலும் அவர்களிடம் வந்து அவர்களை வழிகெடுத்துக் கொண்டே இருப்பேன்” என்றான். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 2)

5. அதற்கு இறைவன், “நீ நிந்திக்கபட்டவன்; துரத்தப்பட்டவன். இங்கிருந்து வெளியேறி விடு. உன்னையும், உன்னைப் பின்பற்றுவோரையும் கொண்டு நிச்சயமாக நரகத்தை நிரப்புவேன்” என்று கூறினான். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 2)

6. பின்பு இறைவன் ஆதமை நோக்கி, “ஆதமே! நீரும், உம் மனைவியும் சுவர்க்கத்தில் குடியிருந்து, நீங்கள் விருப்பியதை உண்ணுங்கள். ஆனால் இந்த மரத்தை (மட்டும்) நெருங்காதீர்கள். (அப்படிச் செய்தால்) நீங்கள் இருவரும் அநியாயம் செய்தவர்கள் ஆவீர்கள்” என்று கூறினான். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 2)

7. ஆனால் இப்லீஸ் அவர்களை ஏமாற்றிவிட்டான். அவன் அவர்களிடம், “நீங்கள் அந்த மரத்தின் பழங்களை உண்டால் வானவர்களாகவும், இங்கு நிரந்தரமாக தங்கக் கூடியவர்களாகவும் ஆகி விடுவீர்கள். நான் உங்கள் நலம் நாடுபவன்தான்” என்று சத்தியம் செய்தான். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 2)

8. அவர்கள் அதில் மயங்கி, அப்பழங்களை உண்ண, அவர்களின் வெட்கத்தலங்கள் அவர்களுக்கு வெளிப்பட்டன. அவர்கள்

சொர்க்கத்தின் இலைகளைக் கொண்டு தங்களை மூடிக் கொள்ள முயற்சித்தனர். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 2)

9. அச்சமயம் இறைவன் தன்னுடைய எச்சரிக்கையையும், ஷைத்தான் அவர்களின் பகிரங்க விரோதி என கூறியதையும் நினைவுபடுத்தி கண்டித்தான். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 2)

10. அவர்கள் தங்களின் தவறுக்காக அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோரினர். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 2)

11. அதற்கு அல்லாஹ் அவர்களை சொர்க்கத்திலிருந்து வெளியேறுமாறும், பூமியில் ஒரு குறிப்பிட்ட காலம் வரை அவர்களுக்கு இருப்பிடங்களும், வாழ்வாதாரமும் உண்டு என்று கூறினான். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 2)

12. மனிதர்களே! உங்களுடைய மானத்தை மறைக்க ஆடையையும், அலங்காரத்தையும் உங்களுக்கு நாம் அருளியுள்ளோம். எனினும், இறையச்சம் என்னும் ஆடைதான் மிக்க மேலானது. (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 3)

13. ஷைத்தான் உங்களை குழப்பத்தில் ஆழ்த்திவிட வேண்டாம். அவனும் அவனுடைய படையும், உங்களின் கண்களுக்குத் தெரியாதவாறு அவர்கள் உங்களைப் பார்க்கின்றனர். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 3)

14. யார் நம்முடைய வசனங்களைப் பொய்யாக்கி, புறக்கணித்தார்களோ, அவர்கள்தான் நரகவாசிகள். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 4)

## ஒரு பார்வை - பகுதி 2

இந்தப் பிரிவு சொர்க்கம் மற்றும் நரகவாசிகளுக்கு இடையேயான உரையாடல்களை எடுத்துக்காட்டுகிறது. நிராகரிப்பவர்கள் நரகத்தில் இருப்பார்கள். மேலும் தங்கள் செல்வம் மற்றும் ஆணவப் பெருமைகளின் பயனற்ற தன்மையையும் உணர்ந்து கொள்வார்கள். நூஹ் (அலை), ஹூது (அலை), ஸாலிஹ் (அலை), லூத் (அலை) மற்றும் ஷுஐப் (அலை) ஆகியோர்களின் வரலாறுகள் விவரிக்கப்பட்டுள்ளன. அவர்களின் எச்சரிக்கைகள் அவர்களின் மக்களால் புறக்கணிக்கப்பட்டன. அதனால் அம்மக்கள் அல்லாஹ்வின் தண்டனையைப் பெற்றார்கள். அந்த நபிமார்களும், அவர்களைப் பின்பற்றியவர்களும் காப்பாற்றப்பட்டனர்.

## தராவிஹ் - 7: (ரக்அத் 5 முதல் 8)

### ஸூரா - 7, அல்அஃராஃப்; வசனம்: 44 - 93; பிரிவு: 5 - 11

1. ஊசியின் துளையில் ஒட்டகம் நுழைய முடியாததைப் போல், இறைமறுப்பாளர்கள் ஒருபோதும் சொர்க்கத்தில் நுளைய மாட்டார்கள். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 5)

2. சொர்க்கவாசிகளுக்கும், நரகவாசிகளுக்கும் இடையே நடக்கும் உரையாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளது. (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 5)

3. சொர்க்கவாசிகள், நரகவாசிகளை நோக்கி, ‘எங்கள் இறைவன் எங்களுக்கு அளித்த வாக்குறுதிகளை, நாங்கள் உண்மையாக பெற்றுக் கொண்டோம். அதேபோல், நீங்களும் பெற்றுக் கொண்டீர்களா?’ என கேட்பார்கள். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 5)

4. அதற்கு அவர்கள், 'ஆம்' என கூறுவர். அப்போது ஓர் அறிவிப்பாளர், "அநீதியாளர்களின் மீது அல்லாஹ்வின் சாபம் நிலவட்டும்!" என்று அவர்களிடையே அறிவிப்பார். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 5)

5. சொர்க்கவாசிகளுக்கும், நரகவாசிகளுக்கும் இடையில் ஒரு மதில் இருக்கும். அதில் சில மனிதர்கள் இருப்பார்கள். அவர்கள் சொர்க்கத்தில் நுழையும் நம்பிக்கையில் இருப்பார்கள். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 5)

6. மதில் சிகரத்திலிருக்கும் அஃராஃப்வாசிகள், நரகத்திலுள்ள சிலரை அடையாளம் கண்டு அவர்களை அழைத்து, "உலகத்தில் இருந்த உங்களின் ஆட்பலமோ, அகம்பாவமோ உங்களுக்கு சிறிதும் உதவவில்லையே!" என்பார்கள். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 6)

7. நரகவாசிகள், சொர்க்கவாசிகளை அழைத்து, "எங்களுக்கு சிறிதளவு தண்ணீரையோ அல்லது இறைவன் உங்களுக்கு அருளியவற்றில் சிறிதளவையோ எங்களுக்கு கொடுங்கள்" என்று கெஞ்சுவார்கள். அதற்கு, "இவ்விரண்டையும் நிராகரிப்போருக்கு அல்லாஹ் தடை செய்து விட்டான்" என்று பதில் கூறுவார்கள். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 6)

8. அல்லாஹ் கூறுகிறான்: "மறுமை நாளின் சந்திப்பை அவர்கள் எவ்வாறு மறந்தும், மறுத்தும் கொண்டிருந்தனரோ அவ்வாரே இன்று அவர்களை நாம் மறந்து விடுவோம்". (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 6)

9. உங்கள் இறைவனிடம் பணிவாகவும், இரகசியமாகவும் பிரார்த்தனை செய்யுங்கள். அவனுடைய அருள், நன்மை

செய்வோருக்கு மிக அருகில் உள்ளது. (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 7)

10. நூஹ் நபியை அவருடைய சமுதாயத்தாருக்கு தூதராக அல்லாஹ் அனுப்பி வைத்தான். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 8)

11. அவர்கள் அவரை பொய்யர் என்று கூறினர். ஆகவே, அவரையும், அவருடன் கப்பலில் இருந்தோரையும் அல்லாஹ் காப்பாற்றினான். பொய்பித்தவர்களை வெள்ளத்தில் மூழ்கடித்தான். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 8)

12. ‘ஆது’ சமுதாயத்தாருக்கு அவர்களுடைய சகோதரர் ‘ஹூதை’ தூதராக அல்லாஹ் அனுப்பினான். அவர்கள் நூஹ் (அலை) அவர்களின் சமுதாயத்தாருக்குப் பின்னர் வந்தனர். அவர்களுக்கு அதிக உடல் வலிமையை வழங்கினான்.. (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 9)

13. ஹூதையும், அவரைச் சார்ந்தவர்களையும் அல்லாஹ் தன் அருளால் காப்பாற்றினான். இறைவசனங்களைப் பொய்யாக்கியவர்கள் அடியோடு சாய்க்கப்பட்டனர். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 9)

14. ‘ஸமூது’ சமுதாயத்தாருக்கு, அவர்களுடைய சகோதரர் ஸாலிஹ் தூதராக அனுப்பப்பட்டார். அதற்கு அத்தாட்சியாக ஒரு பெண் ஒட்டகம் அனுப்பி வைக்கப்பட்டது. (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 10)

15. அவர்கள் ‘ஆது’ சமுதாயத்தாருக்கு பின்னர் வந்தவர்கள். அவர்கள் பூமியின் சமவெளியில் மாளிகைகளையும்,

மலைகளைக் குடைந்து வீடுகளையும் கட்டி வாழ்ந்தனர். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 10)

16. ஆனால், கர்வம் கொண்ட அம்மக்களின் தலைவனும் மற்றும் பலரும் அல்லாஹ்வின் கட்டளையை மீறி, அந்த பெண் ஒட்டகத்தை அறுத்து விட்டனர். அல்லாஹ்வின் கோபத்தால் பூகம்பம் மூலம் அவர்கள் அழிக்கப்பட்டனர். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 10)

17. ‘லூத்’ நபியை அவருடைய சமுதாயத்தாருக்கு தூதராக அல்லாஹ் அனுப்பினான். அவர் ஓரினச்சேர்க்கையை தடுத்தார். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 10)

18. ஆனால் அம்மக்கள், அதை கேட்கவில்லை. அவர்களை கல்மழை பொழியச் செய்து அல்லாஹ் அழித்து விட்டான். லூத்தையும், அவரது மனைவியைத் தவிர மற்ற அவரது மக்களையும் அல்லாஹ் காப்பாற்றினான். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 10)

19. ‘மத்யன்’ நகரத்தில் உள்ளவர்களுக்கு அவர்களுடைய சகோதரர் ‘ஷூஐப்’ தூதராக அனுப்பி வைக்கப்பட்டார். அவர்கள் மக்களிடம் அளத்தல், நிறுத்தல் ஆகியவற்றை குறைவின்றி நிறைவேற்றுமாறு அறிவுறுத்தினார்கள். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 11)

20. ஆனால், அவர்களில் கர்வம் கொண்ட தலைவர்கள் அவரை நிராகரித்து, பாவங்கள் செய்து வந்தனர். அவர்கள் மிக கொடுமையான பூகம்பம் மூலம் அழிக்கப்பட்டனர். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 11).

## ஒரு பார்வை - பகுதி 3

மூஸா (அலை) தெளிவான அத்தாட்சிகளுடன் ஃபிர்அவ்னிடம் அனுப்பப்பட்டார்கள். ஆனால் ஃபிர்அவ்னும் அவருடைய தலைவர்களும் அவர்களை ஒரு சூனியக்காரர் என குற்றம் சாட்டினார்கள். சூனியக்காரர்களுடன் ஒரு போட்டி நடத்தப்பட்டது. தோல்வியுற்ற சூனியக்காரர்கள், மூஸா (அலை) அவர்களை ஏற்றுக்கொண்டனர். பிர்அவ்னுடைய சமூகத்தார் பலமுறை சோதனைக்கு உள்ளாக்கப்பட்டு காப்பாற்றப்பட்டபின், அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளை மீறினார்கள். அதுவே அவர்களின் அழிவுக்கு வழிவகுத்தது.

## தராவிஹ் - 7: (ரக்அத் 9 முதல் 12)

### ஸூரா - 7, அல்அஃராஃப்; வசனம்: 94 - 141; பிரிவு: 12 - 16

1. நபி மூஸாவை நம் அத்தாட்சிகளுடன் பிர்அவ்னிடமும் அவனுடைய சமுதாயத்தாரிடமும் அனுப்பி வைத்தோம். ஆனால் அவர்கள் நிராகரித்து விட்டனர். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 13)

2. அத்தாட்சியை கொண்டு வந்து காட்டுமாறு நபி மூஸாவிடம் பிர்அவ்ன் கேட்டான். அப்போது நபி மூஸா, தன் கைத்தடியைக் கீழே போட்டார். உடனே அது பாம்பாக ஆனது. அவர் தன் கையை சட்டைப் பையிலிருந்து வெளியில் எடுத்த போது, அது பார்ப்பவர்களுக்கு மிக வெண்மையாகத் தென்பட்டது. (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 13)

3. அப்போது, பிர்அவ்னின் சமுதாயப் பிரமுகர்கள், “இவர் ஒரு சூனியக்காரர். இவர் உங்களை, உங்களுடைய நாட்டை விட்டு வெளியேற்ற திட்டமிடுகிறார்” என கூறினர். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 14)

4. ஆகவே, “சூனியத்தில் இவருடன் ஒரு போட்டி நடத்த வேண்டும்” என்று ஆலோசனையும் அவர்கள் வழங்கினர். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 14)

5. சூனியக்காரர்கள் வந்து சேர்ந்தார்கள். “தாங்கள் வென்றுவிட்டால், தங்களுக்கு என்ன வெகுமதி?” என்று கேட்டார்கள். அதற்கு பிர்அவ்ன், “ஆம், உங்களுக்கு வெகுமதி உண்டு. நீங்கள் எனக்கு நெருக்கமானவர்களாகவும் ஆகிவிடுவீர்கள்” என்றான். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 14)

6. போட்டி ஆரம்பமானது. சூனியக்காரர்கள் மூஸாவிடம், ‘யார் முதலில் ஆரம்பிப்பது?’ என வினவினர். அதற்கு, ‘அவர்களே ஆரம்பிக்கட்டும்’ என்று மூஸா நபி கூறினார். அவர்கள் தங்களின் சூனியத்தைப் போட்டதும் அது மக்களின் கண்களைத் தம்வசப்படுத்தி அவர்களை திடுக்கிட வைத்தது. (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 14)

7. பின்னர் அல்லாஹ், மூஸா நபிக்கு தன் கைத்தடியை தூக்கிப் போடுமாறு ‘வஹீ’ அறிவித்தான். அவர் அவ்வாறு போடவே, அது பாம்பாக மாறி, அவர்கள் செயற்கையாக உருவாக்கியவற்றை விழுங்கி விட்டது. (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 14)

8. தோல்வியுற்ற சூனியக்காரர்கள், சிரம் பணிந்தனர். ‘அனைத்துலகங்களின் இறைவனாகிய அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறோம்’ என்றனர். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 14)

9. இதனால் கோபம் கொண்ட பிர்அவ்ன், அவர்களை மாறுகால் மாறுகை வெட்டி சிலுவையில் அறைந்து விடுவதாக மிரட்டினான். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 14)

10. அதற்கு அவர்கள் பயப்படவில்லை. அவர்களின் இறை நம்பிக்கை மேலும் உறுதியாகியது. (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 14)

11. அதனால் ஆத்திரம் அடைந்த பிர்அவ்ன், 'மூஸாவின் சமுதாயத்தினரில் ஆண் பிள்ளைளைக் கொல்வோம்; பெண் பிள்ளைகளை உயிரோடு விட்டு விடுவோம்' என்று கூறினான். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 15)

12. மூஸா (அலை) அவர்கள் தன் மக்களிடம், "நீங்கள் அல்லாஹ்விடம் உதவி தேடுங்கள். பொறுமையோடு இருங்கள். இந்த பூமி அல்லாஹ்வுக்குரியது. தான் நாடியவருக்கு அவன் அதை உரிமையாக்குவான். இறையச்சம் உடையோருக்கே இறுதி வெற்றி" என கூறினார்கள். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 15)

13. பின்னர் பிர்அவ்னுடைய சமூகத்தார் படிப்பினை பெறுவதற்காக, பஞ்சத்தாலும், மகசூல் குறைவாலும் அவர்களை அல்லாஹ் தண்டித்தான். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 16)

14. மேலும் அவர்கள் மீது புயல், வெட்டுக்கிளி, பேன், தவளை, இரத்தம் ஆகியவைகளை சான்றுகளாக ஒன்றன் பின் ஒன்றாக அனுப்பி வைத்தான். ஆனாலும் அவர்கள் கர்வம் கொண்டு குற்றம் செய்வோர்களாகவே இருந்தார்கள். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 16)

15. ஒவ்வொரு முறை வேதனை வரும் போதும், மூஸாவிடம், "உம்முடைய இறைவனிடம் பிரார்த்தித்து இவ்வேதனையை நீக்கினால், நாங்கள் உம்மை விசுவாசித்து, இஸ்ராயீலின் சந்ததிகளை உம்முடன் அனுப்பி வைப்போம்" என்பர். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 16)

16. ஆனால் வேதனை நீங்கியதும், மீண்டும் மாறுசெய்து கொண்டிருப்பார்கள். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 16)

17. இறுதியில், அல்லாஹ் பிர்அவ்னையும் அவனது படையினரையும் கடலில் மூழ்கடித்தான். பலவீனமான அந்த சமூகத்தாரை, அந்த பூமிக்கு உரிமையாளர்களாக ஆக்கினான். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 16)

18. அதனால் இறைவன் தான் கொடுத்த வாக்கை நிறைவேற்றிவிட்டான். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 16)

## ஒரு பார்வை - பகுதி 4

**மூஸா (அலை) அவர்களை சினாய் மலைக்கு வரவழைத்து, அல்லாஹ் நல்லுபதேசங்கள் எழுதப்பட்ட பலகையை (தவ்ராத்) அவர்களுக்கு வழங்கினான். இந்த காலகட்டத்தில், மூஸா (அலை) சமூகத்தின் மக்கள், காளைக்கன்றின் உருவத்தை வணங்கத் தொடங்கினர். அதனால் அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகினர். மூஸா (அலை) திரும்பி வந்தபின் அவர்களைக் கண்டித்து, அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கோரினார்கள். அல்லாஹ் அவர்களை மன்னித்து, அவர்களுக்கு வழிகாட்டுதலுடன், உணவு மற்றும் தண்ணீரை வழங்கினான். இருப்பினும், சிலர் தொடர்ந்து கீழ்ப்படிய மறுத்ததன் விளைவாக அவர்களுக்கு மேலும் தண்டனை வழங்கப்பட்டது.**

## தராவிஹ் - 7: (ரக்அத் 13 முதல் 16)

### ஸூரா - 7, அல்அஃராஃப்; வசனம்: 142 - 162; பிரிவு: 17 - 20

1. **மூஸா (அலை) அவர்களை 40 இரவுகள் சினாய் மலையில் இருக்க அல்லாஹ் கட்டளையிட்டான். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 17)**

2. **குறிப்பிடப்பட்ட இடத்துக்கு மூஸா (அலை) வந்தபோது, இறைவன் அவருடன் உரையாடினான். அப்போது மூஸா (அலை), 'என் இறைவனே! நான் உன்னை பார்க்க விரும்புகிறேன்' என்றார். அதற்கு இறைவன், 'நீர் என்னை ஒருபோதும் காண இயலாது. எனினும் நீர் இம்மலையை பார்க்கவும். அது தன்னுடைய இடத்தில் இருந்தால் நீர் என்னை காணலாம்' என்றான். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 17)**

3. இறைவன் அம்மலை மீது தோற்றம் அளிக்கவே, அது தவிடு பொடியாயிற்று. மூஸா (அலை) திடுக்கிட்டு மூர்ச்சையாகி விழுந்தார். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 17)

4. பின்னர் இறைவன், ‘மூஸாவே! என்னுடைய தூதுக்காகவும், என்னுடன் உரையாடுவதற்காகவும் மற்ற மக்களைவிட உம்மையே நான் தேர்வு செய்துள்ளேன்’ என்றான். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 17)

5. நல்லுபதேசங்கள் எழுதப்பட்ட பலகையை எடுத்துச் சென்று, அதில் உள்ள யாவற்றையும் மக்களுக்கு எடுத்துக் கூறுமாறு அல்லாஹ் மூஸாவுக்குக் கட்டளையிட்டான். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 17)

6. இந்த காலகட்டத்தில், மூஸாவுடைய மக்கள், தங்கள் ஆபரணங்களைக் கொண்டு செய்த காளைக்கன்றின் உருவத்தை வணங்கத் தொடங்கினர். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 18)

7. மூஸா (அலை) திரும்பி வந்து இதனை கேள்வியுற்ற போது, மிகவும் கோபமும், துக்கமும் அடைந்தார். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 18)

8. தன் கையில் இருந்த அப்பலகைகளை எறிந்து விட்டு, தனது சகோதரர் ஹாரூன் (அலை) அவரின் தலைமுடியை பிடித்து இழுத்தார். அதற்கு அவர், ‘இந்த மக்கள் என்னை பலகீனப்படுத்தி, என்னை கொலை செய்யவும் முற்பட்டனர். ஆதலால், அவர்களுடன் என்னை சேர்க்காதீர்’ என்றார். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 18)

9. பின்னர் மூஸா (அலை) இறைவனிடம் தன்னையும், தன் சகோதரரையும் மன்னிக்குமாறும், அவனுடைய அருளில் தங்களையும் சேர்த்துக்கொள்ளுமாறும் பிரார்த்தித்தார். “அவனே கருணையாளர்களில் பெரிய கருணையாளன்” என்றும் கூறினார். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 18)

10. ‘யார் காளைக் கன்றை தெய்வமாக எடுத்துக் கொண்டார்களோ, அவர்களுக்கு நிச்சயமாக இறைவனின் கோபமும், இழிவும் இவ்வுலக வாழ்க்கையிலேயே அதிசீக்கிரத்தில் வந்தடையும்’. (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 19)

11. மூஸா (அலை) அவர்களின் மக்களை, அல்லாஹ் 12 கூட்டங்களாக பிரித்தான். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 20)

12. அவர்கள் மூஸா (அலை) அவர்களிடம் குடி தண்ணீர் கேட்டபோது, அல்லாஹ் மூஸா (அலை) அவர்களை தன் கைத்தடியைக் கொண்டு, கல்லை அடிக்கச் செய்தான். அதிலிருந்து 12 ஊற்றுக்கள் வந்தன. (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 20)

13. அவர்களுக்கு மேகத்தின் மூலம் நிழல் கொடுத்தான். மற்றும் ‘மன்னு, ஸல்வா’ என்னும் ஆகாரங்களை புசிக்கக் கொடுத்தான். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 20)

14. தலை குனிந்து அல்லாஹ்வை வணங்கியவர்களாக அவ்வூரில் நுழையும்படி அவர்களுக்குக் கட்டளை இடப்பட்டது.. ஆனால், அவர்கள் அதை மறுத்தனர். அதன் காரணமாக அவர்கள் மீது வானத்திலிருந்து வேதனை இறக்கியது. (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 20)

## ஒரு பார்வை - பகுதி 5

**சப்பாத் மக்களின் வரலாறு கொடுக்கப்பட்டுள்ளது. அல்லாஹ் மனிதகுலம் செய்த உடன்படிக்கையை நினைவூட்டுகிறான். தீர்ப்பு நாளைப் பற்றி எச்சரித்து, ஷைத்தானிடம் இருந்து பாதுகாப்பு தேடவும், குர்ஆனைக் கவனமாகக் கேட்கவும், அல்லாஹ்வை பணிவுடன் நினைவுகூறவும் அறிவுறுத்துகிறான்.**

## தராவிஹ் - 7: (ரக்அத் 17 முதல் 20)

### ஸூரா - 7, அல்அஃராஃப்; வசனம்: 163 - 206; பிரிவு: 21 - 24

1. **கடலோரத்தில் இருந்த ஓர் ஊர் மக்களுக்கு, சனிக்கிழமை மீன் பிடிக்க தடை செய்யப்பட்டிருந்தது. ஆனால் அவர்கள் வரம்பு மீறிக் கொண்டிருந்தார்கள். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 21)**

2. **ஏனெனில் சனிக்கிழமைதான் மீன்கள் நீரின் மேல் மட்டத்திற்கு வந்தன. மற்ற நாட்களில் அவை அவ்வாறு வருவதில்லை. (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 21)**

3. **அவர்கள் பாவம் செய்து கொண்டிருந்ததன் காரணமாக அவர்கள் இவ்வாறு சோதனைக்குள்ளாக்கப்பட்டார்கள். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 21)**

4. **பாவத்திலிருந்து விலகி வந்தவர்களை, அல்லாஹ் காப்பாற்றினான். வரம்பு மீறி சனிக்கிழமை மீன் பிடித்தவர்களை தண்டித்தான். (அவர்கள் சனிக்கிழமைக்கு முந்திய நாளிலேயே வலையை போட்டு வைத்து விட்டு, சனிக்கிழமை கழிந்ததும் அதிலுள்ள மீனை எடுத்தனர்). அவ்வாறு வரம்பு மீறிய அவர்களை, “நீங்கள் சிறுமைப்பட்ட குரங்குகளாக மாறிவிடுங்கள்” என்று அல்லாஹ் கூறினான். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 21)**

5. **அல்லாஹ், இஸ்ரவேலர்களின் சந்ததியர்களை பல பிரிவுகளாகப் பிரித்து, பூமியின் பல பாகங்களுக்கு சிதற**

விட்டான். அவர்களில் நல்லோர்களும், தீயோர்களும் இருந்தனர். அவர்கள் நல்வழியில் திரும்புவதற்காக அவர்களை நல்லவை மற்றும் தீயவை மூலம் அவன் சோதித்தான். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 21)

6. அலஸ்ட் (Alast) உடன்படிக்கை: ஆதமுடைய மக்களின் முதுகுகளிலிருந்து அவர்களின் வழித்தோன்றல்களை வெளியாக்கி (பூமிக்கு வரவிருக்கும் அனைத்து மக்களிடம்), “நான் உங்கள் இறைவனல்லவா?” என்று அல்லாஹ் கேட்க, அதற்கு அவர்கள், ‘ஆம்’ என்று சாட்சிளித்தார்கள். அந்த உறுதிமொழி இங்கு நினைவுபடுத்தப்படுகிறது. (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 22)

7. ஏனென்றால், “இதை மறந்து விட்டோம்”, என்று மக்கள் மறுமை நாளில் சாக்குப் போக்கு சொல்லமுடியாது. அல்லது ‘எங்கள் முன்னோர்தான் இணை வைத்து வணங்கினர், நாங்கள் அவர்களை பின்பற்றினோம். அதனால் எங்களை தண்டிக்க வேண்டாம்’, எனவும் கூறமுடியாது. இவ்வாறுதான் அல்லாஹ் தன் சான்றுகளைத் தெளிவுபடுத்துகிறான். இதன்மூலம் அவர்கள் இறைவழிக்குத் திரும்பலாம். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 22)

8. நபியே!, “யுக முடிவு நாள் எப்போது வரும்?” என்று உம்மிடம் அவர்கள் கேட்கிறார்கள். “அதைப் பற்றிய அறிவு என் இறைவனிடத்தில் தான் இருக்கிறது. அது வரும் நேரத்தை, அவனைத் தவிர வேறு எவரும் வெளியிட முடியாது”. (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 23)

9. அது பெரும் பளுவான சம்பவமாக நிகழும். திடீரென அது உங்களிடம் வரும். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 23)

10. (நபியே!) ஷைத்தானிடமிருந்து உமக்கு ஏதேனும் ஊசலாட்டம் ஏற்பட்டால், உடனே அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருவீராக! அவன் அனைத்தையும் கேட்பவன், நன்கறிந்தவன். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 24)

11. குர்ஆன் ஓதப்பட்டால், அதனை செவி தாழ்த்திக் கேளுங்கள்; மௌனமாக இருங்கள். அதனால் நீங்கள் அருள் செய்யப்படலாம். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 24)

12. உம்முடைய மனதிற்குள் பணிவோடும், பயத்தோடும், காலையிலும், மாலையிலும் உரத்த சப்தமின்றி மெதுவாக உம்முடைய இறைவனை தியானம் செய்வீராக! மறந்து விட வேண்டாம். (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 24)

13. இறைவனிடத்தில் இருக்கின்ற வானவர்கள், அவனை வழிபடுவதில் இறுமாப்புக் கொள்வதில்லை. அவனுக்கு சிரம் பணிந்து வணங்கியவர்களாக அவனை எப்போதும் துதித்துக்கொண்டிருப்பார்கள். <u>(ஸஜிதா - 1)</u> (ஸூரா - அல்அஃராஃப்; பிரிவு: 24)

-----------------------------